**கவனிக்க** .- *06.12.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1841 - 2013 දෙසැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2013.12.13

*1841 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 3114 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 3114 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, சனவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## பெலிஅத்த பிரதேச சபை

*களியாட்ட வரி - 2014*

பெலிஅத்த பிரதேச சபையினால் 2012 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 6 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மான இலக்கம் 7-1 இன் கீழ் பின்வரும் அட்டவணையில் குறித்துள்ள கருத்துக்களை சபை ஏற்றுக்கொண்டதாகவும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 267 ஆம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் (2) ஆம் பிரிவின் (2) உப பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு தென் மாகாண மாகாண சபை உள்ளூராட்சி விடயப் பொறுப்பமைச்சர் குஸ்திஞ்ஞா வடு ஷான் விஜயலால் த சில்வா ஆகிய நான் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

குஸ்திஞ்ஞா வடு ஷான் விஜயலால் த சில்வர்,
முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சரும்,
தென் மாகாணத்தின் மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்.
காலி,
2013, ஒற்றோபர் 02.

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஏதாவது களியாட்ட நடவடிக்கைகள் பெலியத்த பிரதேச சபையின் வலுப் பிரதேசத்தினுள் யாராவது ஒருவரால் நடத்தப்படுமாயின் அக்களியாட்ட நடவடிக்கைக்கு-

(அ) சினிமா களியாட்ட நடவடிக்கைகளாயின் உட்பிரவேசிப்பதற்காக விற்பனை செய்யப்பட்ட உட்பிரவேச பத்திரங்களின் முழுப் பெறுமதியில் நூற்றுக்கு 7% களியாட்ட வரியாக செலுத்த வேண்டும் என்பதோடு,

(ஆ) வேறு களியாட்ட நடவடிக்கைகள் ஆயின் அது தொடர்பாக உட்செல்பவர்களிடமிருந்து அறவிடப்படும் மொத்த தொகையில் நூற்றுக்கு 10% க்கு சமனான தொகையையும்.

மேற்கூறப்பட்ட களியாட்ட வரி கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின்படி களியாட்ட வரியை விதித்து அறவிடப்படுவதற்கும் அதன் களியாட்ட நடவடிக்கையை நடத்தப்படும் திகதிக்கு முன் வரியை பெலியத்த பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் பெலியத்த பிரதேச சபை கட்டளை விதித்துள்ளது.

12-570/ 2

---

# துணை விதிகள்

## அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனம் (அங்கீகாரம் பெற்ற துணை விதியின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் தென் மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி அவரால் ஆக்கப்பட்டதும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1811 ஆம் இலக்க 2013.05.17 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் IV (ஆ) பகுதியில் அறிவிக்கப்பட்ட தென் மாகாண நகர சபையின் அதிகார எல்லைக்குள் சகல அங்கீகாரம் பெற்ற துணை விதிகளுக்கு பொருத்தமான வரைவிலக்கணம் சம்பந்தமான துணை விதி எல்லா அங்கீகாரம் பெற்ற துணை விதகிளுக்கு சம்பந்தமான பொது நடவடிக்கை சம்பந்தமான துணை விதி சம்பந்தமான ஏதோரு துணை விதியின் நடவடிக்கையாவது தீர்மானங்களை மீறுதல் பற்றிய தண்டனை சம்பந்தமான துணைவிதி, சபை கூட்டங்களில் அலுவல்கள் நடாத்திச் செல்லும் சம்பந்தமான துணை விதி, மீன் விற்பனை சம்பந்தமான துணை வதி, இறைச்சி விற்பனை சம்பந்தமான துணைவிதி, குளிர்பானம் தொழிற்சாலை சம்பந்தமான துணை விதி. சிகை அலங்கரிக்கும் நிலையம். சிகை அலங்கரிக்கும் கடை, சிகை தரிக்கும் நிலையம், அழகுபடுத்தும் மத்தயஸ்தானம் சம்பந்தமான துணை விதி, பேகரி சம்பந்தமான துணைவிதி, பால் மந்தை சம்பந்தமான துணை விதி, நீச்சல் தடாகம் சம்பந்தமாக துணை விதி, ஐஸ் தொழிற்சாலை சம்பந்தமான துணை விதி, சாப்பாட்டு கடை, உணவகம் மற்றும் தேனீர், கோப்பி கடைகள் சம்பந்தமான துணை விதி, ஹோட்டல் சம்பந்தமான துணை விதி, தங்கும் சந்தைகள் சம்பந்தமான துணை விதி, சலவை சாலை சம்பந்தமான துணை விதி, தொழிற்சாலை சம்பந்தமான துணை விதி, இழவு வீட்டுக்கு சேவைகள் வினியோகிக்கும் நிலையம் சம்பந்தமான துணை விதி, இடம் விட்டு இடம் சென்று விற்கும் வியாபாரியால் உணவு பண்டங்கள் விற்பனை செய்யும் சம்பந்தமாக துணை விதி, பாதசாரி கடவை இடம் சம்பந்தமாக துணை விதி, கட்டிடப் பொருட்கள் சார்ந்த தொழிற்சாலை நிலையமும் கட்டிடப் பொருட்கள் களஞ்சிய நிலையத்தை ஒழுங்கு செய்தல், மேற்பார்வையும் நிர்வாகம்

சம்பந்தமான துணை விதி, வாகனங்கள் நிறுத்துதல் மற்றும் வாகனம் நடாத்தும் சம்பந்தமான துணை விதி, தெருக்களை சேதம் செய்தல் வீதிகளில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்வதை தடுப்பது சம்பந்தமான துணை விதி, தகனஞ் செய்யும் இடத்தை ஒழுங்கு செய்தல், நிருவாகம் செய்தல் கட்டணம் அறவிடல் சம்பந்தமான துணை விதி, பொது சந்தை நடாத்திச் செல்ல சம்பந்தான துணை விதி, விளையாட்டு மைதானம் சம்பந்தான துணை விதி, சமூக மண்டபம் சம்பந்தமான துணை விதி, விளம்பரம் சம்பந்தமான துணை விதி, அடகு மற்றும் ஈடு பெறுபவர் பதிவுசெய்தல் சம்பந்தமான துணை விதி, தவணை அறிக்கை மற்றும் தகவல் சமர்ப்பிக்கும் சம்பந்தான துணை விதி முதலான வரைவு (கெடும்பத்) சம்பந்தமாக துணை விதி தென் மாகாண, மாகாண சபையால் 2013.07.23 ஆந் திகதி நடாத்தப்பட்ட மாகாண சபை கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றேன்.

சான் விஜயலால் த சில்வா,
முதல் அமைச்சரும் நிதி, திட்டமிடல், சட்டமும்
ஒழுங்கும் போக்குவரத்து, நீர் விநியோக,
வடிகாலரமைப்பு, மின்சக்தி பொறியியல் சேவை,
சுகாதார, சுதேச வைத்தியம் மற்றும்
உள்ளூராட்சி விடயங்களுக்கும் பொறுப்பான அமைச்சரும்,
தென் மாகாணத்தின் மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்.
காலி,
2013, நவெம்பர் 20.

12-570/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.